## அரையாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 2 ( 2018 )

### மேல்நிலை முதலாம் ஆண்டு
### வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $20 \times 1 = 20$

1. இடத்தடை -------- மூலம் நீக்கப்படுகிறது.
   அ. போக்குவரத்து ஆ. பண்டகசாலை இ. விற்பனையாளர் ஈ. காப்பீடு
2. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் அமைப்பு இல்லாதது?
   அ. கூட்டு பங்கு நிறுமம் ஆ. தனியாள்வணிகம் இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு
3. கூட்டாண்மையை ---------- பதிவு செய்யலாம்.
   அ. நிறுமப் பதிவாளர் ஆ. கூட்டுறவு பதிவாளர் இ. கூட்டாண்மைப் பதிவாளர்
4. ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட் சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் ----------- எனப்படும்.
   அ. பட்டய (அ) சாசன நிறுமங்கள் ஆ. சட்டமுறை நிறுமங்கள் இ. பதிவு செய்யப்பட்டநிறுமங்கள்
   ஈ. அயல்நாட்டு நிறுமங்கள்
5. அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு ---------
   அ. தொண்டு நிறுவன நோக்கம் ஆ. சேவை நோக்கம் இ. இலாப நோக்கம்
   ஈ. சீர்திருத்த நோக்கம்
6. பன்னாட்டு நிறுவனங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?
   அ. கிளைகள் ஆ. அதன் துணை நிறுவனங்கள் இ. தலைமையகம் ஈ. நாடாளுமன்றம்
7. ஒரு அரசாங்க நிறுவனம் எதன் பெயரில் பங்குகளை வாங்குகிறது?
   அ. பிரதமர் ஆ. குடியரசுத் தலைவர் இ. இந்தியத் தலைமை நீதிபதி ஈ. மாநில முதலமைச்சர்
8. கீழ்க்கண்டவற்றில் எது தொழிற்துறை வங்கி அல்ல?
   அ. ICICI ஆ. HSBC இ. SIDBI ஈ. IDBI
9. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக -------- கிடங்குகள் பயன்படுத்தப் படுகின்றன.
   அ. ஆவணம் ஆ. தனியார் இ. குளிர் சேமிப்பு ஈ. கூட்டுறவு
10. காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு ------------- ஆகும்.
    அ. மிக்க நம்பிக்கை ஆ. கூட்டுறவு இ. பகர உரிமை ஈ. அண்மைக் காரணம்
11. வளரும் நாடுகளுக்கு புற ஒப்படைப்பு வழங்கப்படுவதின் சிறப்பு நோக்கம் ---------
    அ. குறைவான கூலி ஆ. நிலம் இ. மூலதனம் ஈ. காரணிகள்
12. நெறிமுறைகளுக்கான தேவைகள் ----------
    அ. உயர்மட்ட மேலாண்மை ஆ. நடுத்தர அளவிலான மேலாளர்கள்
    இ. மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ. மேற்கண்ட அனைத்தும்
13. நிலைச்சொத்துக்களை வாங்க ------ ஐ பயன்படுத்துவது சிறந்த தேர்வாக இருக்கும்.
    அ. கடனீந்தோர் ஆ. நீண்டகால கடன்கள் இ. வங்கி மேல்வரைப்பற்று
    ஈ. உண்டியல் வட்டம் செய்தல்.
14. சுய உதவிக் குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து ----------- ஏற்படுத்த வேண்டும்.
    அ. பொது நிதி ஆ. குழு தொகுப்பு நிதி இ. குழு நிதி ஈ. மேற்குறிப்பிட்ட ஏதும் இல்லை
15. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது ----------
    அ. வியாபாரம் ஆ. தொழிற்சாலை இ. வணிகம் ஈ. வர்த்தகம்



16. மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கும் இணைப்புச் சங்கிலியாகச் செயல்படும் வணிக இடைநிலையர் --------- ஆவார்.
    அ. உற்பத்தியாளர் ஆ. தரகர் இ. சில்லறை வியாபாரி ஈ . வாடிக்கையாளர்
17. ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர் ----------
    அ. அகற்றீட்டு முகவர் ஆ. அனுப்புகை முகவர் இ. கழிவு முகவர் ஈ. தன்பொறுப்பு முகவர்
18. உலக வர்த்தக் அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் --------
    அ. நியூயார்க் ஆ. லண்டன் இ. ஜெனிவா ஈ. பிரேசில்
19. ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை ---------
    அ. செலுத்தல் சமநிலை ஆ. வாணிபச் சமநிலை இ. பெறுதல் செலுத்தல் அறிக்கை
    ஈ. கணக்கியல் அறிக்கை
20. செலுத்து சமநிலையின் உபரி வெளிக்காட்டுவது ---------
    அ. ஏற்றுமதி இறக்குமதியைவிட அதிகமாக இருத்தல்
    ஆ. இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமமாக இருத்தல்
    இ. இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமநிலைக்கு அதிகமாக இருத்தல்
    ஈ. இவை அனைத்தும்.

### பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 21- க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

21. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
22. பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்? ஏன்?
    அ. மளிகை ஆ. மருந்துக்கடை இ. கைத்தொழில் மையம் ஈ. சட்ட நிறுமம்
23. ஒரு பங்கு – ஒரு வாக்கு - குறிப்பு வரைக
24. பன்னாட்டு நிறுவனத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை விவரி.
25. பற்று அட்டையின் தேவையை சுருக்கமாக விளக்குக.
26. சார்ட்டர் நபர் என்றால் என்ன?
27. தனி உரிமையியலின் வகைகள் யாவை?
28. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் யாது?
29. உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?
30. செலுத்தல் சமநிலை என்றால் என்ன?

### பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. பண்டமாற்று வணிகத்தின் தடைகள் யாவை?
32. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரி.
33. கூட்டாண்மை கலைப்பிற்கும், நிறுமக் கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றை விவரி.
34. கூட்டுறவுகளின் தீமைகளை விவரி? (எவையேனும் மூன்று)
35. கீறலிட்ட காசோலை என்றால் என்ன?
36. பன்னாட்டு நிறுவனத்தின் வேலைவாய்ப்புப் பற்றி ஒரு உதாரணத்துடன் விளக்குக.
37. தொழிலில் எந்த நோக்கத்திற்காக நிலைமுதல் தேவைப்படுகிறது?

38. உற்பத்தி மற்றும் பணி துறையில் சிறு நிறுவனங்களுக்கான முதலீட்டு வரம்பைக் குறிப்பிடுக

39. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

40. செலுத்தல் சமநிலை அறிக்கை ஏன் தயாரிக்க வேண்டும்?

## பகுதி --- IV

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.</u> $7 \times 5 = 35$

41. தொழிலின் சிறப்பியில்புகள் யாவை?

( அல்லது)

கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.

42. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? ( ஏதேனும் 10 )

( அல்லது)

ஏற்றுமதி வணிகத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகளை விளக்குக.

43. பொதுத்துறை நிறுவனங்களின் சிற்ப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து மட்டும்)

( அல்லது)

பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக. உதாரணம் தருக. (ஏதேனும் ஐந்து மட்டும்)

44. இந்தியாவில் உள்ள பண்டகக் காப்பகங்களை விளக்குக.

( அல்லது)

காப்பீட்டின் வகைகளை விளக்குக

45. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல், அறிவுசார் செயல்முறை புறத்திறனீட்டல் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை விளக்குக

( அல்லது)

ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

46. சில்லறை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரிகள் ஆற்றிடும் பணிகள் யாவை?

( அல்லது)

பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை?

47. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதி வணிகத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

( அல்லது)

மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை?